தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**10 வயதுப்பிரிவு**
(01.01.2012 – 31.12.2012 வரையில் பிறந்தோர்)

## கரும்புலி மில்லர் மாமா

“மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள்தான் கரும்புலிகள்” என்று தலைவர் மாமாவால் போற்றப்பட்டவர்கள் கரும்புலிகள். காலத்தையும் களத்தையும் உருவாக்கி, தாமே வெடியாகப் போகும் மனோதிடம் கொண்டவர்கள் இவர்கள்.

சிங்கள அரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் அச்சம்கொள்ளச் செய்து, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஏழு யூலை ஐந்தாம் நாளன்று முதலாவது கரும்புலி மாவீரராகத் தன்னை ஆகுதி ஆக்கிக்கொண்டவர் கப்டன் மில்லர் மாமா. அவர் விடுதலைக்கு விதையாகி முப்பத்தைந்தாவது ஆண்டு நினைவிலே நிற்கிறோம்.

கப்டன் மில்லர் மாமா நெல்லியடியில் தொடக்கிய கரும்புலிகளின் காலம் தரை, கடல் என வியாபித்து வான் கரும்புலிகள் வரை வரலாறு படைத்தது. பலாலி, ஆனையிறவு, கட்டுநாயக்கா, அநுராதபுரம் என பகைவரின் பல உயர்பாதுகாப்புத் தளங்களில் கூட, துல்லியமாகத் தாக்குதல் நடாத்தியவர்கள் எங்கள் கரும்புலிகள். தேசத்தின் புயல்களாக உயிராயுதங்களாக உலகையே தமிழீழத்தை நிமிர்ந்து பார்க்க வைத்தது அவர்களின் வீரம்.

கரும்புலிகளின் மன வலிமையை எத்தகைய ஆயுதங்களாலோ தொழில்நுட்பத்தாலோ அடக்கி விட முடியாது. தேசப்பற்று மிக்க வீர உணர்வையும் தமிழீழ விடுதலையை இலட்சியமாகவும் கொண்ட இந்த மன வலிமை எம்மிடமும் இருக்க வேண்டும்.

மறைமுகக் கரும்புலிகளாக அனைத்தையும் துறந்து, இலட்சியத்தை மூச்சாகக் கொண்டு காற்றுடன் கலந்துவிட்ட வரலாற்று நாயகர்களை நாம் மனதில் இருத்தி வணங்குகின்றோம். தமிழீழ விடுதலைக்கான பணிகள் நிறைந்து கிடக்கின்றன. நாம் அனைவரும் ஒன்றிணைந்து வலுப்பெற்று, தமிழீழ விடுதலை என்ற எங்கள் இலக்கை அடைவோம் என உறுதி கொள்கிறோம்.

நன்றி,

வணக்கம்.